பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

13 11 2024 7 15
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. ஜார்க்கண்ட் மாநில சட்டப்பேரவைத் தேர்தலுக்கான முதல்கட்ட வாக்குப்பதிவு சற்று முன் தொடங்கியது.

2. பிரதமர் திரு நரேந்திரமோடி ஆறு நாள் பயணமாக நைஜீரியா, பிரேசில் மற்றும் கயானா நாடுகளுக்கு வரும் 16-ஆம் தேதி புறப்பட்டுச் செல்கிறார்.

3. இந்திய வந்துள்ள சௌதி அரேபிய வெளியுறவுத்துறை அமைச்சருடன், இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்து வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் பேச்சுக்கள் நடத்தினார்.

4. நாட்டின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிறுவுதிறன் ஓராண்டில் 24 புள்ளி இரண்டு ஜிகாவாட்டாக அதிகரித்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

5. மொனாக்கோவில் நடைபெற்று வரும் **Monde carlo** ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் ஜோஸ்னா சின்னப்பா காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

<u>*---- இனி விரிவான செய்திகள் ----*</u>

**[]<<<>>>[]**

ஜார்கண்ட் மாநில சட்டப்பேரவைத் தேர்தலுக்கான முதல்கட்ட வாக்குப்பதிவு சற்று முன் தொடங்கியது.

காலை ஏழு மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு மாலை ஐந்து மணி வரை நடைபெறும்.

எனினும் தொள்ளாயிரத்து 50 வாக்குச்சாவடிகளில் மட்டும் மாலை நான்கு மணியுடன் வாக்குப்பதிவு நிறைவடையும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இம்மாநிலத்தில் மொத்தமுள்ள 81 தொகுதிகளில் 43 தொகுதிகளுக்கு முதல்கட்ட வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

இதற்காக 15 ஆயிரத்து 344 வாக்குச்சாவடி மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

வாக்குப்பதிவையொட்டி 200 கம்பெனி துணை ராணுவப் படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பதற்றமான வாக்குச்சாவடிகளில் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதனிடையே பல்வேறு மாநிலங்களில் 34 சட்டப்பேரவை தொகுதிகளுக்கும், கேரள மாநிலம் வயநாடு மக்களவை தொகுதிக்கும் இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவும் சற்று முன் தொடங்கி நடைபெற்று வருகிறது.

[]<<<>>>[]

இதனிடையே மகாராஷ்டிரா மாநில சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

அரசியல் கட்சிகளின் தலைவர்களும், வேட்பாளர்களும் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி நேற்று புனேயில் பிஜேபி மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொண்டார்.

நடுத்தர மக்களின் பங்களிப்பு காரணமாக இந்தியா மூன்றாவது பெரிய பொருளாதார நாடு என்ற நிலையை நோக்கி முன்னேறி வருவதாக அவர் தெரிவித்தார்.

புனே உட்பட மகாராஷ்டரா மாநிலத்தில் பிஜேபி கூட்டணி அரசு நிறைவேற்றியுள்ள திட்டங்களை அவர் பட்டியலிட்டார்.

வருமான வரி சலுகை, சுகாதார வசதிகள் உள்ளிட்ட நடுத்தர மக்களின் நலன்களை கருத்தில் கொண்டு மத்திய மாநில அரசுகள் திட்டங்களை நிறைவேற்றி வருவதாக பிரதமர் குறிப்பிட்டார்.

ஜம்மு-கஷ்மீர் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களின் வளர்ச்சிக்கு காங்கிரஸ் கட்சி தடையாக இருப்பதாகவும் திரு நரேந்திரமோடி குற்றம்சாட்டினார்.

இதனிடையே மகாராஷ்டிராவின் கோண்டியா மாவட்டத்தில் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய காங்கிரஸ் மூத்த தலைவரும், மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான திரு ராகுல்காந்தி, சாமான்ய மக்களின் நலன்களை மத்திய அரசு புறக்கணித்து விட்டதாகக் கூறினார்.

ஏழைகள், விவசாயிகள் மீது அக்கறையின்றி பிஜேபி அரசு செயல்படுவதாகவும் அவர் குற்றம்சாட்டினார்.

மகாராஷ்டிராவில் காங்கிரஸ் கூட்டணி ஆட்சிக்கு வந்தால் விவசாய பயிர்களுக்கு உரிய விலை கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.

நாட்டில் 50 சதவீதம் அளவுக்கு உள்ள இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் நலன்கள் புறக்கணிக்கப்படுவதாகவும் திரு ராகுல்காந்தி குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

மகாராஷ்டிரா சட்டப்பேரவைத் தேர்தலையொட்டிதேர்தல் ஆணையத்தின் சி-விஜில் செயலியில் கடந்த ஒரு மாத காலத்தில் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட புகார்கள் வரப்பெற்றுள்ளதாக அம்மாநில தலைமை தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார்.

அவற்றில் பெரும்பாலான புகார்கள் தேர்தல் ஆணையத்தின் மூலம் தீர்வு காணப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டது முதல் மகாராஷ்டிராவில் சட்டவிரோதமாக கொண்டு செல்லப்பட்ட 502 கோடி ரூபாய் மதிப்பிலான ரொக்கம் மற்றும் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நடத்தை விதிமீறல் மற்றும் பணப்பட்டுவாடா உள்ளிட்ட புகார்களை அளிப்பதற்காக சி-விஜில் என்ற செயலி உருவாக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

**[]<<<>>>[]**

பிரதமர் திரு நரேந்திரமோடி ஆறு நாள் பயணமாக நைஜீரியா, பிரேசில் மற்றும் கயானா நாடுகளுக்கு வரும் 16-ஆம் தேதி புறப்பட்டுச் செல்கிறார்.

நைஜீரியா அதிபர் திரு போலா அகமது **Tinubu** -வின் அழைப்பின் பேரில் தமது பயணத்தின் முதல் கட்டமாக பிரதமர் அந்நாட்டுக்கு செல்கிறார்.

அங்கு இரு நாடுகளுக்கு இடையே பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பது குறித்து பிரதமர் பேச்சு நடத்துகிறார்.

நைஜீரியாவில் வசிக்கும் இந்திய சமூகத்தினர் மத்தியிலும் அவர் உரையாற்றவுள்ளார்.

பொருளாதாரம், எரிசக்தி, பாதுகாப்பு ஒத்துழைப்பு உள்ளிட்ட துறைகளில் கடந்த 2007-ஆம் ஆண்டு முதல் இந்தியா – நைஜீரியா இடையே நல்லுறவு நீடித்து வருகிறது.

இதைத் தொடர்ந்து வரும் 18-ஆம் தேதி பிரேசில் தலைநகர் ரியோடி ஜெனிரோவுக்கு செல்லும் பிரதமர், அங்கு ஜி-20 உச்சிமாநாட்டில் பங்கேற்கிறார்.

உலகளாவிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் குறித்தும், சென்ற ஆண்டு புதுதில்லியில் அறிவிக்கப்பட்ட ஜி-20 பிரகடனத்தின் முன்னேற்றம் குறிதது்ம் இந்த மாநாட்டில் திரு நரேந்திரமோடி உரையாற்றவுள்ளார்.

இந்த மாநாட்டிற்கு இடையே பல்வேறு நாடுகளின் தலைவர்களையும் பிரதமர் சந்தித்து பேசவுள்ளார்.

தமது பயணத்தின் நிறைவாக வரும் 19-ஆம் தேதி கயானா செல்லும் பிரதமர், அந்நாட்டு அதிபர் உள்ளிட்ட தலைவர்களை சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

1968-ஆம் ஆண்டுக்குப் பின்னர் கயானா நாட்டுக்குச் செல்லும் முதல் இந்திய பிரதமர் திரு நரேந்திரமோடி என்பது குறிப்பிடத்தக்கது.

**[]<<<>>>[]**

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு மூன்று நாள் பயணமாக தாத்ரா நாகர்ஹவேலி மற்றும் டாமன்-டையூ யூனியன் பிரதேசத்துக்கு செல்கிறார்.

ஷில்வாசா என்ற இடத்தில் உள்ள நமோ மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சிக் கழகத்தை பார்வையிடும் குடியரசுத் தலைவர் அங்குள்ள மாணவர்களுடன் கலந்துரையாடவுள்ளார்.

தொடர்ந்து **Zanda** பள்ளியை திறந்து வைக்கும் அவர், அங்கு நடைபெறும் நிகழ்ச்சியிலும் பங்கேற்கிறார்.

76 கோடி ரூபாய் மதிப்பில் இந்த பள்ளி அமைக்கப்பட்டுள்ளதாகவும், 12 ஆயிரம் மாணவர்களுக்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

இந்தியா வந்துள்ள ரஷ்ய துணை பிரதமர் டெனிஸ் **Manturov** -வை நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் நேற்று புதுதில்லியில் சந்தித்து பேசினார்.

இந்தியா – ரஷ்யா இடையே பொதுவான நலன் சார்ந்த விஷயங்கள் குறித்து இரு தலைவர்களும் ஆலோசித்ததாக நிதி அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இரு நாடுகளுக்கும் இடையேயான நிதி மற்றும் பொருளாதார நல்லுறவை மேலும் வலுப்படுத்துவது தொடர்பாகவும் அவர்கள் கருத்துக்களை பரிமாறிக் கொண்டாதாக அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

**[]<<<>>>[]**

இந்திய வந்துள்ள சௌதி அரேபிய வெளியுறவுத்துறை அமைச்சரும், இளவரசருமான பைசல் பின் பர்கான் அல் சவுத்-வுடன், வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இருதரப்பு பேச்சுக்கள் நடத்தினார்.

சௌதி அரேபியாவுடன் நூற்றாண்டுகால பொருளாதார மற்றும் சமூக கலாச்சார உறவுகள் குறித்து இருவரும் ஆலோசனை நடத்.தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அந்நாட்டுடன் வர்த்தக பரிவர்த்தனைகளில் இந்தியா இரண்டாவது பெரிய நாடாக திகழ்வதாகவும், கடந்த ஆண்டில் 52 பில்லியன் டாலர் மதிப்பிலான வர்த்தகம் நடைபெற்றிருப்பதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

**[]<<<>>>[]**

நாட்டின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிறுவுதிறன் கடந்த ஓராண்டில் 24 புள்ளி இரண்டு ஜிகாவாட்டாக அதிகரித்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு அக்டோபர் மாதத்திலிருந்து இந்த ஆண்டு அக்டோபர் மாதம் வரையிலான காலத்தில் இந்த வளர்ச்சி ஏற்பட்டிருப்பதாகவும், கார்பன் புகையில்லா சூழலை உருவாக்கும் நடவடிக்கையில் மத்திய அரசு தீவிரமாக ஈடுபட்டிருப்பதாகவும் எரிசக்தி அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

சூரியசக்தியைப் பொறுத்தவரை கடந்த ஓராண்டில் 92 ஜிகாவாட அளவுக்கு அதிகரித்திருப்பதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

இலங்கை நாடாளுமன்ற தேர்தல் நாளை நடைபெறவுள்ள நிலையில் அதற்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

225 உறுப்பினர்களைக் கொண்ட இலங்கை நாடாளுமன்றத்திற்கு நாளை காலை ஏழு மணிக்கு தொடங்கும் வாக்குப்பதிவு மாலை நான்கு மணி வரை நடைபெறும் என்று அந்நாட்டு தேர்தல் ஆணைய தலைவர் திரு ரத்னாயகே தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

தென்மேற்கு வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வுப்பகுதி வடதமிழக கடலோரப் பகுதியை நெருங்கி உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக வடதமிழக கடலோர மாவட்டங்கள், தெற்கு ஆந்திரா மாவட்டங்களில் இன்று மிதமான மழை பெய்ய வாய்பபு உள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களிலும், நாகை, மயிலாடுதுறை, தஞ்சாவூர் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களிலும் மழை நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இரவு முதல் விட்டு விட்டு மழை பெய்து வருகிறது.

கனமழை காரணமாக மயிலாடுதுறை மாவட்டத்தில் இன்று பள்ளி கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

கடலூர், அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களில் பள்ளிகளுக்கு மட்டும் இன்று விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

மொனாக்கோவில் நடைபெற்று வரும் மான்டிக் கார்லோ ஸகுவாஷ் போட்டியில் இந்தியாவின் ஜோஸ்னா சின்னப்பா காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

நேற்று நடைபெற்ற காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர் பிரான்ஸ் நாட்டின் **Melissa alves** –ஐ 4-11, 11-5, 11-9, 9-11, 11-7 என்ற செட் கணக்கில் வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார்.

**[]<<<>>>[]**

இந்தியா – தென்னாப்ரிக்கா அணிகளுக்கு இடையேயான மூன்றாவது டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

தென்னாப்பிரிக்காவின் செஞ்சூரியனில் இப்போட்டி இரவு எட்டரை மணிக்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

பீகாரில் நடைபெற்று வரும் ஆசிய மகளிர் சாம்பியன் ஹாக்கி போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் இந்தியா மூன்று - இரண்டு என்ற கோல் கணக்கில் தென்கொரியாவை வென்றது.

இன்று நடைபெறும் ஆட்டத்தில் இந்தியா – தாய்லாந்தை எதிர்கொள்கிறது.

***End of News***